பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 16 வெள்ளிக்கிழமை 31.12.2021 கதிர் 2842

## தமிழ்த் தலைவர்களின் கூட்டம் மாலை ஆரம்பம்

தமிழ்ப் பேசும் தரப்புக்களின் ஒற்றுமைப்பட்ட நிலைப்பாட்டை ஆவணமாக்கும் முயற்சியாக தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தனின் வீட்டில் இன்று மாலை 6 மணியளவில் தலைவர்களின் சந்திப்புத் தொடங்கியது.

☞2

# இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து மயிலிட்டி மீனவர்கள் இன்று பெரும் போராட்டம்!




(ந.லோகதயாளன், இ.கலையமுதன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்., மயிலிட்டிப் பகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக இன்று பெரும் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வலிகாமம் வடக்கு மீனவர் சமாசம் மற்றும் மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்கங்களின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணியளவில் மயிலிட்டித் துறைமுகத்தில்ஒன்றுகூடியமீனவர்கள்இந்தியமீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக போராட்டத்தில்

☞2

## கொரோனாவால் பதுளையில் ஒரே நாளில் அறுவர் மரணம்!

கொரோனா வைரஸ் தொற்றால் பதுளை மாவட்டத்தில்நேற்று6பேர்உயிரிழந்துள்ளனர்.

பண்டாரவளையில் இருவர், வெலிமடையில் இருவர், ஹப்புத்தளையில் ஒருவர், பசறையில் ஒருவர் என்ற வகையில் அறுவர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

☞2

# இலங்கையில் 'ஒமிக்ரோன்' மேலும் 41 பேருக்கு உறுதி!



### சந்திம ஜீவந்தர அதிர்ச்சித் தகவல்

**இலங்கையில் கொரோனாவின் புதிய திரிவு வைரஸான ஒமிக்ரோன் தொற்றுடன் மேலும் 41 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**

☞2

## மன்னாரில் மஞ்சளுடன் இருவர் வசமாக சிக்கினர்

மன்னார், நறுவிலிக்குளம் பகுதியில் சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட 41 கிலோகிராம் மஞ்சளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வங்காலைப் பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

☞2

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று சிறுமிகள் தென்பகுதியில் நீராடச் சென்றவேளை மாயம்

### ஒருவர் நேற்றிரவு சடலமாக மீட்பு



கொழும்பு, ஹங்வெல்ல - துன்மோதர ஆற்றில் நீராடச் சென்று காணாமல்போன மூன்று சிறுமிகளில், 14 வயதான சிறுமியின் சடலம் நேற்றிரவு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட சிறுமி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது.

☞2

## தாமதிக்கும் ஒவ்வொரு நாள்களும் பேராபத்து மிக்கதாகவே அமையும்

### ராஜபக்ஷ அரசுக்கு ரணில் எச்சரிக்கை



நாடு பட்டினிச் சாவை நோக்கிச் செல்கின்ற இன்றைய நிலைமையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் நாட்டின் நலன் கருதி அவசரத் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு நாள்களும் பேராபத்து மிக்கதாகவே அமையும்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும்

## 2022 இல் ஓய்வூதியம் வழங்கப்படும் திகதி

ஓய்வூதிய சுற்றறிக்கை இலக்கம் 05/2021இன் பிரகாரம் ஓய்வூதிய திணைக்களத்தால் 2022ஆம் ஆண்டுக்கான மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுபற்றிய விவர சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன்

☞2

## இந்திய மீனவர்கள் 43 பேரின் மறியல் ஜன. 13 வரை நீடிப்பு!

(ந.லோகதயாளன்)

இந்திய மீனவர்கள் 43 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் இன்று இவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், இவர்களுக்கான விளக்கமறியலை ஜனவரி 13 ஆம் திகதி வரை நீடிக்க ஊர்காவற்றுறை நீதிமன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - நெடுந்தீவுக்கு அருகே சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நிலையில் கடந்த 19ஆம் திகதி இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு நகரில் பலத்த பாதுகாப்பு

கொழும்பு நகரம் உள்ளிட்ட கொழும்பு புறநகர் பிரதேசங்களில் இன்று முதல் பொலிஸாரால் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காலி முகத்திடலில் விசேட பொலிஸ் பரிசோதனைகள் இடம்பெறுகின்றமையுடன் போக்குவரத்துப் பொலிஸார் பாதுகாப்புக்

☞2

# வடக்கில் திட்டமிட்டு இறக்கிவிடப்படும் யானைகள்



(ந.லோகதயாளன்)

தெற்கில் இருந்து ஏற்றி வரப்படும் யானைகள் வடக்கில் ஊர் மனைகளை அண்டிய பகுதிகளில் இறக்கிவிடப்படுகின்றன என்று மாங்குளம், நெடுங்கேணி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் நெடுங்கேணி விவசாய அமைப்பின் தலைவர் பூபாலசிங்கம் மேலும் தெரிவிக்கையில்,

அநுராதபுரம், பொலன்னறுவை, ஆனைமடுவ காட்டை அண்டிய பகுதிகளில் குழப்பம் விளைவிக்கும் யானைகளையும் தனியாரால் வளர்க்கப்பட்டு வயது முதிர்ந்த யானைகள் மற்றும் மதம் கொண்ட யானைகளை இவ்வாறு ஏற்றிவந்து முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் பிரதான வீதிகளில் இறக்கிச் செல்கின்றனர் என நாம் நீண்டகாலமாக குற்றம் சாட்டுகின்றோம். இருப்பினும் அதிகாரிகள் அதனை மறுத்தே வருகின்றனர்.

இந்தநிலையில் இன்று காலையும் ஒரு பார ஊர்தியில் ஒரு யானை ஏற்றிவரப்பட்டபோது அதில் இருந்த நால்வரிடம் வினவியபோது இதனை

☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## தாமதிக்கும் ஒவ்வொரு நாள்களும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் சமகால நிலைவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு, எரிவாயு அடுப்பு வெடிப்பு, எரிபொருள்களின் விலையேற்றம், பால்மா உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பு, மரக்கறிகளின் விலை உயர்வு எனப் பலதரப்பட்ட பிரச்சினைகளால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் விரக்தியின் விளிம்பில் நிற்கி ன்றனர். ஆனால், அரசோ மக்களை ஏமாற்றும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.

இந்த அரசின் முட்டாள்தனமான தீர்மானங்களால் நாட்டின் பொருளாதாரம் படுவீழ்ச்சியடைந்துள்ளது. எந்த நாடும் இலங்கைக்குக் கைகொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதே ஒரே வழி என அரசிடம் நாம் பல தடவைகள் கூறிவிட்டோம். ஆனால், அரசோ அசமந்தப்போக்கில் செயற்படுகின்றது.

இராணுவத்தின் துணையுடன் ஆட்சியை நடத்திச் செல்லலாம் என்று அரசு கனவு காண்கின்றது. இராணுவத்தைக்கொண்டு வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை எப்படி உயர்த்த முடியும்?

இராணுவத்தை முன்னிறுத்தி ஆட்சியை நடத்த அரசு முயன்றால் நாட்டு மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள். சர்வதேசமும் கடுமையாக எதிர்க்கும்.

நாடு பட்டினிச் சாவை நோக்கிச் செல்கின்ற இன்றைய நிலைமையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவும் நாட்டின் நலன் கருதி அவசரத் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். இல்லையேல் 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே நாடும் அரசும் மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும். எமது கருத்துக்களை அரசியல் ரீதியில் அரசு பார்க்கக் கூடாது. நாட்டின் நலன் கருதி அரசு முடிவு எடுக்க வேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு நாள்களும் பேராபத்து மிக்கதாகவே அமையும் - என்றார்.

## 2022 இல் ஓய்வுதியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளியிடப்பட்டுள்ளது என ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எ.ஜகத். டி.டயஸ் அறிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டுக்கான மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பின்வரும் திகதிகளில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை, பெப்ரவரி 10ஆம் திகதி வியாழக்கிழமை, மார்ச் 10ஆம் திகதி வியாழக்கிழமை, ஏப்ரல் 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மே 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, ஜூன் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஜூலை 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஒகஸ்ட் 10ஆம் திகதி புதன்கிழமை, செப்டெம்பர் 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஒக்ரோபர் 06ஆம் திகதி வியாழக்கிழமை, நவம்பர் 10ஆம் திகதி வியாழக்கிழமை, டிசெம்பர் 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை.

## கொழும்பு நகரில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அதற்கமைய, மதுபோதையில் வாகனங்களை செலுத்துவோர், அதிக வேகத்தில் வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படும் நபர்களை இனங்காண்பதற்காக கொழும்பு நகரின் பல்வேறு பிரதேசங்களில் சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகளை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வடக்கில் திட்டமிட்டு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாங்குளத்தில் இறக்கி விடுமாறு கூறியே அதிகாரிகள் அனுப்பி வைத்தனர் எனக் கூறுகின்றனர்.

இதற்குப் பின்பும் மாவட்ட அதிகாரிகளும், அரசின் ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களும் எம்மை ஏமாற்ற முடியாது.

தெற்கில் இருந்து பல ஆண்டுகளாக அதிக யானைகளை வடக்கில் கொண்டு வந்து இறக்கும் அதிகாரிகள் வடக்கில் இருந்து ஒரு யானையேனும் வெளி மாவட்டத்துக்குக் கொண்டு சென்றுள்ளனரா என்பதைக் கேட்க விரும்புகின்றோம்.

போரின்போது ஆயுதம் மூலம் அழித்தவர்கள் தற்போதும் எந்த வகையில் எல்லாம் எம்மை அழிக்க முடியுமோ அதனை மிகத் திட்டமிட்ட வகையில் மேற்கொள்கின்றனர்.

ஆனாலும், பதவி ஆசைகொண்டோர் அதனையும் நியாயப்படுத்தி இந்த அரசோடு ஒட்டி நிற்கின்றனர் - என்றார்.

## யாழ்ப்பாணத்தைச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காணாமல்போன ஏனைய இரு சிறுமிகளையும் தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

6 பேர் நேற்றுப் பகல் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் மூவர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெள்ளவத்தை வந்த குழுவினரே அவிசாவளைப் நோக்கி பயணித்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## மன்னாரில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கொரோனாவால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த மரணங்களுடன் பதுளை மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இதுவரை 560 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று பதுளை மாவட்ட கொரோனாக் கட்டுப்பாட்டுச் செயலணியினர் தெரிவித்துள்ளனர்.

## இலங்கையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தனது கீச்சகத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வக சோதனைகளில் 41 புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்திய மீனவர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஈடுபட்டனர்.

அத்துமீறுகின்ற இந்திய மீனவர்களைக் கைது செய், கைது செய்கின்ற படகுகளை அரசுடைமையாக்கு போன்ற கோஷங்களை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுப்பினர்

கொட்டும் மழைக்கு மத்தியிலும் கடற்தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# சறுக்கி விழுந்து கர்ப்பிணி சாவு

திருகோணமலை, டிசெ. 31

வீட்டில் சிமெந்துத் தரையில் சறுக்கி விழுந்து மயக்கமுற்ற கர்ப்பிணிப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை, தோப்பூர் - சின்னக்குளம் பகுதியைச் சேர்ந்த நிரஞ்சலராசா சரணிகா எனும் 19 வயதுடைய கர்ப்பிணிப் பெண்ணே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

குறித்த பெண் சமயலறைக்குச் சென்று தண்ணீரை எடுத்துவரும்போது வீட்டின் வரவேற்பு அறையில் சறுக்கி விழுந்து மயக்கமடைந்துள்ளார்.

பின்னர் உறவினர்கள் அவரைத் தோப்பூர் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது இடையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தமிழ்த் தலைவர்களின் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரா. சம்பந்தன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், மனோ கணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் மாலை 6 மணியளவில் கலந்துரையாடலை ஆரம்பித்தனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்–
076 443 8622

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**


உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்



75 ஆவது இதழ்
செம்மண்
வெளிவந்துவிட்டது
வாசித்துவிட்டீர்களா?



- மீனவர்களுக்குள் ஊடுருவும் இராஜதந்திரம்
- அப்போ யார்தான் போராடுவது?
- விலை உயர்வுத் தந்திரம்...?
- மூளைக் கசடுகளை வெளியேற்றுவோம்
- சூத்திர மாடுகள் சவாரியோடுமோ?
- தேவருக்காக வேய்ந்த கூரை
- சீன – தமிழ் உறவுகள் செழிக்க வாய்ப்பு அதிகம்
- வங்க தேசம் சாதித்தது எப்படி?



மேலும் பல சுவையான அம்சங்களுடன்



உங்கள் பிரதிகளுக்கு அழையுங்கள்
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விடை கொடு ஆண்டே...!

இன்று ஆண்டின் கடைசி நாள்.

இலங்கை மக்களுக்கு மிக மோசமான – மிக நெருக் கடியான – மிகவும் பாதிப்பான – கஷ்டங்களைத் தந்த 2021 ஆம் ஆண்டுக்கு நாம் விடை கொடுக்கும் இறுதித் தருணம் இது.

இந்த ஆண்டு நெருக்கடிகள், சிக்கல்கள், கஷ்டங்களை தன்னுடன் சுமந்து கொண்டே வந்தது. போகும் போதும் மிக உச்ச நெருக்கடிகளைத் தந்தபடியே விடை பெறுகின்றது.

2021 தந்த கஷ்டங்களின் தொடர்ச்சியாகவே புத்தாண்டு, இந்த நள்ளிரவு பிறக்கின்றது. புத்தாண்டிலாவது புத் தெழுச்சியும் புது வாழ்வும் புது உத்வேகமும் கிடைக்காதா என்ற நப்பாசையுடன்தான் இலங்கை மக்கள் புத்தாண்டை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள்.

உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் என்ற நுண்ணுயிரி, அதன் திரிவுகள் விகாரம் ஏற்படுத்திய மோசமான பாதிப்புக்கள் ஒருபுறம் என்றால், இலங்கை யின் ஆட்சிப் பீடம் – நிர்வாக மையம் – ஏற்படுத்திய குளறு படிகளின் பாதிப்பு அதற்கு நிகரானது.

நாட்டின் பொருளாதாரம் படுத்துவிட்டது. இலங்கை ரூபாவின் பெறுமதி முற்றாகச் சரிந்து விட்டது. நாட்டின் மொத்த உற்பத்தி பெரு வீழ்ச்சியில். பண வீக்கம் உச்சம். பொருள்களின் விலை எகிறுகின்றது. எங்கும் அத்தி யாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு, பற்றாக்குறை. மீண்டும் கியூ யுகம். நாட்டுக்கு அவசியமான – அத்தி யாவசியமான – பொருள்களைக் இறக்குமதி செய்வதற்குக் கூட அந்நியச் செலாவணிக் கையிருப்பு இல்லை. கரைந்து விட்டது. படு கடன்களின் தவணைக் கட்டணம் எல்லை மீறிவிட்டது. அதைக் கட்ட முடியாமல் புத்தாண்டில் நாடு வங்குரோத்து நிலையை அடைந்து விட்டதாக அறிவிக்கப் படும் அபாயம் சூழ்ந்திருப்பதாக பொருளியல் வல்லுநர்கள் நேரத்துடன் எச்சரித்துள்ளனர்.

கொவிட் தொற்றை ஒட்டி நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படப் போகின்றது, அதை எதிர்கொள்ளும் வழி வகைகளைத் தேட வேண்டும் என்ற கட்டாயத்தில் – நெருக்கடியில் – நாடு மூழ்கியிருக்கையில், நாட்டின் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ எதேச்சையாக ஒரு முடிவை எடுத்தமை, நாட்டை இந்த மோசமான நெருக் கடிக்குள் தள்ளியிருக்கின்றது.

இந்தக் காரணத்தினால் நாட்டின் இன்றைய பேரவல நிலைக்கு அவரே காரணம். அவர் மட்டுமேதான் காரணம்.

சேதன உரத்தை மட்டுமே பயன்படுத்த அனுமதிப்பது என்ற விவசாயத்துறைத் தீர்மானம் மேலோட்டமாகப் பார்த்தால் நாட்டுக்கு நல்லது, பசுமைப் புரட்சிக்கு வழிகோலும் என்றெல்லாம் கூறப்பட்டாலும், பொருளாதார ரீதியில் நாட்டுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் முட்டாள் தனமான முடிவு என்பது நேரத்துடனேயே பல தரப்புக ளினாலும் சுட்டிக்காட்டப்பட்டது.

பத்தாண்டு கால நீட்சியில் பெரும் கஷ்டப்பட்டு நிறை வேற்ற வேண்டிய திட்டத்தை படு முட்டாள்தனமாக ஓராண்டுக்குள் நிறைவேற்றுவதற்கு போதிய முன் ஆயத் தங்கள், ஏற்பாடுகள் ஏதுமின்றி, எதேச்சாதிகாரமாகத் தீர்மானித்து, அதைக் கட்டாயப்படுத்தி நடைமுறைப் படுத்த எத்தனித்த ஜனாதிபதியின் தவறுதான் இலங்கை மக்களின் இன்றைய மோச நிலைமைக்குப் பிரதான காரணம்.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட நாட்டின் பொருளா தாரத்தை, விவசாயப் புரட்சி – பசுமை சாதனை – என்ற பெயர்களில் எடுக்கப்பட்ட முடிவு மேலும் மேலும் மோச மாக்கியது. அதுதான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் இரண்டு ஆண்டு கால ஆட்சிச் சாதனை.

அந்தச் சாதனையின் வேதனையோடு இன்று 2021 இற்கு விடை கொடுக்கின்றனர் இலங்கை மக்கள். நாளை பிறக்கும் புத்தாண்டிலாவது இந்த கொடூரப் போக்கு ஆட்சி முறைமை மாறாதா என்ற ஏக்கப் பெருமூச்சுத்தான் மக்கள் மனதில் நிறைந்துள்ளது.

## மக்களுக்குச் சிறப்பான சேவை கிடைக்கும் வகையில் அரச – தனியார் போக்குவரத்து ஒழுங்குபடுத்தப்படும்!

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி

மக்களுக்கு சிறப்பான போக்குவரத்து சேவை கிடைக்கும் வகையில் அரச மற்றும் தனியார் போக்குவரத்து சேவை விரைவில் ஒழுங்குபடுத்தப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாண நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையத்தைப் பயன்படுத்துவது தொடர்பான இழுபறி நிலைக்கு விரைவில் இறுதித் தீர்வு வழங் கப்படும் என்றும் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையினருக்கும் தனியார் போக்குவரத்து துறையினருக்கும் இடையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமை யிலான கலந்துரையாடல் நடைபெற்றது.

இதுதொடர்பாகக் கருத்து தெரிவித்த அமைச்சர் –

மக்களுக்கு பாதிப்புக்கள் அற்ற நிறை வான போக்குவத்து சேவை வழங்கப்பட வேண்டும் எனவும், அதற்கு அரச மற்றும் தனியார் போக்குவரத்துத் துறையினர் மத்தி யில் புரிந்துணர்வுடனான சேவை ஏற்படுத்து வதே இந்தக் கூட்டத்தின் நோக்கம் என்று தெரிவித்தார்.

கூட்டத்தின்போது, யாழ் மாவட்டத்தில் இருந்து மேற்கொள்ளப்படுகின்ற அரச மற் றும் தனியார் போக்குவரத்து சேவைகளை இணைந்த நேர அட்டவணை மேற்கொள் வதில் இருக்கும் நடைமுறைச் சிக்கல்கள் மற் றும் யாழ். நகரில் புதிதாக அமைக்கப்பட் டுள்ள பஸ் நிலையத்தை மக்களுக்கு நன்மைபயக்கும்வகையில்செயற்படுத்தவது உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையா டப்பட்டன. இதன்போது, அனைத்து தரப்பினரதும் கருத்துக்களை கேட்டறிந்த அமைச்சர், மேற்படி விடயங்கள் தொடர்பாகத் துறைசார் அமைச்சர்களுடன் கலந்துரையாடி விரைவில் இறுதித் தீர்மானம் மேற்கொள் ளப்படும் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய சுமார் ஆயிரத்து 500 கொள்கலன்கள் தேக்கம்!

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய சுமார் ஆயிரத்து 500 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளன.

இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவற்றில் சுமார் 500 அரிசி கொள்கலன்களில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொன்னி சம்பா, நாட்டரிசி மற்றும் பச்சரிசி போன்றவை அவற்றில் காணப் படுகின்றன எனவும் அவர் கூறியுள்ளார்.

அவற்றில் ஒருசில கொள்கலன்களே இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நாட்டிலுள்ள சிறப்பு அங்காடிகளில் விறகு, மண் சட்டிகள் விற்பனைக்கு!

நாட்டில் தற்போது நிலவி வரும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாகக் கொழும்பில் சிறப்பு அங்காடிகளில் விறகு மற்றும் மண் சட்டிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

தற்போது நிலவி வரும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாகவும் மற்றும் எரிவாயு தொடர்பு டைய வெடிப்புச் சம்பவங்கள் காரணமாகவும் பொது மக்கள் தற்போது விறகு மற்றும் மண் ணெண்ணெய் அடுப்பு பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

மேலும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக நாடளாவிய ரீதியில் மண்ணெண்ணெய் அடுப்புகளுக்கான கேள்வி அதிகரித்துள் ளது.

எனவே, தற்போது மண்ணெண்ணெய் அடுப்புகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள் ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து மக்கள் நீண்ட வரிசையில் நின்று மண்ணெண்ணெயைப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.



## மைத்திரிபாலவைச் சந்தித்தார் சீனத் தூதர் கீ சென்ஹொங்

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து புத்தாண்டு வாழ்த் துக்களைத் தெரிவித்துள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன் போது முன்னாள் ஜனாதிபதிக்கு புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்த சீனத் தூதுவர், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வாழ்த் துக்களையும் தெரிவித்தார்.

## இலஞ்சம் கோரிய விவகாரம் தொடர்பாக மாந்தை கிழக்கு பிரதேச செயலர் முறைப்பாடு

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் மற்றும் காணி அபிவிருத்தி உத்தியோகத்தர் இலஞ்சம் கோரினார் என மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் பரப்பிவரும் கருத்துக்கள் உண்மைக்கு புறம்பானவை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தங்களின் கடமைகளுக்கும் தமக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் இவ்வாறு ஊடகங்களுடாக கருத்து தெரிவித்தமைக்கு எதிராக நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்தில் பிரதேச செயலாளர் மற்றும் காணி உத்தியோகத்தர் ஆகியோரால் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளோம் எனவும் நட்டாங்கண்டல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# உக்ரைன் விவகாரத்தில் பதற்றம் அமெரிக்கா – ரஷ்யா மீண்டும் பேச்சு!

உக்ரைன் விவகாரத்தில் ஏற்பட்டுள்ள பதற்றங்களுக்கு மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடின் ஆகியோர் இன்று தொலைபேசியில் பேசவுள்ளனர். இரு தலைவர்களுக்கும் இடையே இந்த மாதத்தில் இடம்பெறும் இரண்டாவது பேச்சு இதுவாகும்.

இரண்டு தலைவர்களும் உக்ரைன் பாதுகாப்பு விவகாரம் மற்றும் ஐரோப்பாவில் நிலவும் சூழல் குறித்து பேசுவார்கள் என வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடான உக்ரைன் ரஷ்யாவின் எல்லையையொட்டி அமைந்துள்ளது. சுமார் 30 வீதத்தினர் அங்கு ரஷ்ய மொழி பேசுவோராக உள்ளனர். இந்நாட்டில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கு அதிகரிப்பது தனது பாதுகாப்புக்கு ஆபத்து என ரஷ்யா கருதுகிறது.

கடந்த 2013 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் ஆதரவு பெற்ற அப்போதைய உக்ரைன் ஜனாதிபதி விக்டா யானுகோவிச்சை எதிர்த்து ஐரோப்பிய யூனியன் ஆதரவு பெற்ற எதிர்க்கட்சியினர் மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பெரும் அரசியல் குழப்பம் ஏற்பட்ட நிலையில் யானுகோவிச் ரஷ்யாவில் தஞ்சமடைந்தார். அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய ஆதரவாளர்களால் புதிய அரசு அமைக்கப்பட்டது. அந்த அரசை எதிர்த்து கிழக்கு மற்றும் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ரஷ்ய ஆதரவு கிளாச்சியாளர்கள் போரில் ஈடுபட்டனர். ரஷ்ய இராணுவ உதவியுடன் அவர்கள் கிழக்கு உக்ரைனின் டோனட்ஸ்க் லூஹான்ஸ்க் உள்ளிட்ட பகுதிகளைக் கைப்பற்றினர்.

அப்போது உக்ரைனின் அங்கமாக இருந்த கிரீமியா மீது படையெடுத்த ரஷ்யா, அந்த தீபகற்பத்தை தன்னுடன் இணைத்துக் கொண்டது. இந்தச் சூழலில், உக்ரைன் எல்லை அருகே ஏராளமான படையினரை ரஷ்யா குவித்து வருகிறது. உக்ரைன் மீது படையெடுத்து அந்த நாட்டை முழுமையாக தன்னுடன் இணைத்துக் கொள்ள ரஷ்யா திட்டமிட்டு வருவதாக அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் கூறி வருகின்றன.

உக்ரைனை ஆக்கிரமிப்பதற்காக 1.75 லட்சம் படையினரை அனுப்ப ரஷ்யா திட்டமிட்டு வருவதாகவும் ஏற்கெனவே 1 லட்சம் ரஷ்ய படையினா உக்ரைன் எல்லைப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளனர் எனவும் அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர். எனினும் இந்தக் குற்றச்சாட்டுகளை ரஷ்யா மறுத்து வருகிறது.

பயிற்சிகளுக்காகவே தனது படைகளை உக்ரைன் எல்லையில் நிறுத்தி உள்ளதாகவும் தமது சொந்த மண்ணில் தமது படைகளை சுதந்திரமாக நகர்த்துவதற்கு ரஷ்யாவுக்கு உரிமை இருப்பதாகவும் அந்நாடு தெரிவித்துள்ளது.


இந்நிலையில் உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமித்தால் அந்த நாட்டுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்கா கூறி வருகிறது. இதனால் இரு தரப்புக்கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் விளாடிமிர் புடினுக்கும் இடையேயான மற்றொரு தொலைபேசி உரையாடல் இன்று இடம்பெறவுள்ளது.

# இரவு ஊரடங்கு கட்டுப்பாடுகள் தென்னாபிரிக்காவில் நீக்கம்!

ஒமிக்ரோன் திரிவு பரவலால் தீவிரமடைந்த கொவிட் –19 தொற்று நோயின் நான்காவது அலையின் உச்சத்தை தென்னாபிரிக்கா கடந்திருக்கலாம் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொற்றுப் பரவல் குறைவடைந்து வரும் நிலையில் நாடு முழுவதும் விதிக்கப்பட்டிருந்த இரவு நேர ஊரடங்கு உத்தரவையும் தென்னாபிரிக்கா நீக்கியுள்ளது.

ஒமிக்ரோன் திரிவு மிகவும் தீவிரமாகப் பரவக்கூடியதாக இருந்தாலும் முந்தைய அலைகளுடன் ஒப்பிடுகையில் நாகாவது அலையில் மருத்துவமனை சேர்க்கை வீதம் குறைவாக இருந்ததாக தென்னாபிரிக்க அரசாங்கம் தெரிவித்துள்ளது.



இந்த அலையில் இறப்பு எண்ணிக்கையிலும் சிறிய அதிகரிப்பே ஏற்பட்டதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒமிக்ரோன் புதிய திரிவு கடந்த மாதம் தென்னாபிரிக்காவில் முதன் முதலில் கண்டறியப்பட்டது. இது உலகெங்கும் வேகமாகப் பரவி பரவலான கட்டுப்பாடுகளுக்கு வழிவகுத்தது.

இந்நிலையில் டெல்டா மற்றும் ஒமிக்ரோன் திரிவுகளின் கலவையானது மிகத் தீவிரமாக பரவி ஆபத்தான சுனாமி போன்ற கொரோனா அலையை உலகெங்கும் ஏற்படுத்தி வருவதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் எச்சரித்துள்ளார்.

எனினும் ஒமிக்ரோன் முதன்முதலில் கண்டறியப்பட்ட தென்னாபிரிக்க தங்கள் நாட்டில் இந்தத் திரிவால் ஏற்பட்ட நான்காவது அலையின் தீவிரம் தணிந்து வருவதாகத் தெரிவித்து இரவு நேர ஊரடங்கு உள்ளிட்ட சில கட்டுப்பாட்டு விதிகளை தளர்த்தியுள்ளது.

நாடு முழுவதும் தொற்று நோயாளர் தொகை மற்றும் மருத்துவமனைகளில் சேர்க்கும் வீதங்கள் குறைந்துள்ளதாக நேற்று இடம்பெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிறகு வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் டிசெம்பர் 25 ஆம் திகதியுடன் முடிவடைந்த 7 நாள்களில் தினசரி சராசரி தொற்று நோயாளர் தொகை 89,781 ஆக இருந்தது. அதற்கு முந்தைய வாரத்தில் இந்தத் தொகை 127,753 ஆக இருந்தது.

தென்னாபிரிக்காவில் இதுவரை கிட்டத்தட்ட 35 லட்சம் கொவிட் –19 தொற்று நோயாளர் கள் பதிவானமையுடன், 90,000 க்கும் அதிகமான இறப்புகள் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சூடானில் மூடப்பட்டிருந்த சுரங்கத்திற்குள் நுழைந்த 38பேர் பரிதாபகரமாக சாவு

சூடானின் மேற்கு கொர்டோபன் மாகாணத்தில் செயற்படாமல் மூடப்பட்டிருந்த, தங்கச்சுரங்கத்திற்குள் நுழைந்த 38பேர் உயிரிழந்துள்ளனர்.

தர்சயா சுரங்கத்தில் பல அடுக்குகள் சரிந்தன எனவும், இறந்தவர்களைத் தவிர குறைந்தது 8 பேர்காயமடைந்தனர்எனவும்அவர்களைஉள்ளூர் மருத்துவமனைக்குகொண்டுசெல்லப்பட்டனர்எனவும்உள்ளூர்ஊடகங்கள்செய்திவெளியிட்டுள்ளன.

சூடான் மினரல் ரிசோர்சஸ் கம்பெனி லிமிடெட் பேஸ்புக்கில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில், மூடப்பட்ட, செயல்படாத சுரங்கம், தலைநகர் கார்ட்டூமுக்கு தெற்கே 700 கி.மீ. (435 மைல்) தொலைவில் உள்ள என் நஹுட் பகுதியில் உள்ள புஜா கிராமத்தில் அமைந்துள்ளது.

அரசாங்கம் முன்னெடுத்து நடத்தும் தர்சயா தங்கச்சுரங்கம் கடந்த சில மாதங்களாக செயல்படாமல் மூடப்பட்டிருந்தது.

இந்தநிலையில், தங்கச்சுரங்கத்திற்குள் அனுமதியின்றி நுழைந்த 50க்கும் மேற்பட்டோர் தங்கம் எடுக்கும் நோக்கத்தோடு சுரங்கத்தை தோண்டியுள்ளனர். அப்போது, சுரங்கத்தின் மேற்பகுதி திடீரென இடிந்து விழுந்தது. இந்த விபத்தில் 38பேர் உயிரிழந்தனர் என மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர். சூடான் முழுவதும் பாரம்பரிய சுரங்கத் தொழிலில் சுமார் 20 லட்சம் சூடான் ஊழியர்கள் பணிபுரிகின்றனர் என தரவுகள் தெரிவிக்கின்றன. சூடானின் மொத்த தங்க உற்பத்தியில் பாரம்பரிய சுரங்கங்கள் மூலம் கிட்டத்தட்ட 75 சதவீதம் உற்பத்தி செய்யப்படுவதாகவும், 93 தொன்களுக்கும் அதிகமாக தங்கம் வெட்டி எடுக்கப்படுவதாகவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.






# போயிங் விமானம் மீதான தடையை நீக்கியுள்ளது இந்தோனேஷியா

2018 ஆம் ஆண்டில் 189 பேர் உயிரிழப்பிற்கு காரணமான போயிங் 737 மக்ஸ் விமான விபத்து இடம்பெற்று மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் குறித்த விமானம் மீதான தடையை இந்தோனேஷியா நீக்கியுள்ளது. விமானத்தின் அமைப்புகளில் செய்யப்பட்ட மாற்றங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் விதிக்கப்பட்ட தடை உடன் அமுலுக்கு வரும்வகையில் நீக்கப்படும் என இந்தோனேஷியாவின் போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எத்தியோப்பிய விமான சேவைக்குச் சொந்தமான 737 மக்ஸ் விமானம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 157 பேர் உயிரிழந்த நிலையில் உலக நாடுகள் குறித்த விமானத்திற்கு தடை விதித்திருந்தன. இதனை அடுத்து இந்த ஆண்டு ஆரம்பத்தில் குறித்த போயிங் 737 மக்ஸ் விமானத்தை மீண்டும் சேவைக்கு இணைத்துக்கொள்ள அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் அனுமதி வழங்கப்பட்டது. இந்நிலையில் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் இருந்து அத்த வகை விமானங்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளவுள்ளதாக எத்தியோப்பிய விமான சேவையும் அறிவித்துள்ளது. ஆஸ்திரேலியா, ஜப்பான், இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் இந்த ஆண்டு விமானத்திற்கான தடைகளை நீக்கிய நிலையில், 180க்கும் மேற்பட்ட நாடுகள் போயிங் 737 மக்ஸ் விமானத்தை பயன்படுத்த அனுமதித்துள்ளன.



# மெரினா கடற்கரைக்குச் செல்ல இன்று இரவு 8 மணி முதல் தடை

கொரோனாப் பரவல் இன்னும் முடிவுக்கு வராத நிலையில் ஒமிக்ரோன் தொற்றும் வேகமாகப் பரவி வருகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் புத்தாண்டுக்கொண்டாட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸ் தரப்பில் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து விரிவான அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கிறது.

இன்று நள்ளிரவிலிருந்து நாளைக் காலை 5 மணிவரை அத்தியாவசிய வாகனங்கள் மட்டுமே பயணிக்கவேண்டுமென்றும், ஏனைய வாகனங்களுக்கு அனுமதி இல்லை எனவும் சென்னை பொலிஸ் கமிஷ்னர் சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார்.

சென்னையில், புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்காக மெரினாவில் இரவு 8 மணியிலிருந்து பொதுமக்கள் கூடுவது வழக்கம். நள்ளிரவு வேளையில் மெரினா கடற்கரையில் லட்சக்கணக்கானோர் கூடி புத்தாண்டை வரவேற்பது வழமையான ஒரு நிகழ்வாகும். ஆயினும், கொரோனாப் பரவலைக் கருத்தில் கொண்டு மெரினாவில் கூட்டம் கூட இன்று இரவும், நாளை முழுவதும் முழுமையாக தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

மெரினா கடற்கரைச் சாலை இன்று இரவு 8 மணியிலிருந்து முழுமையாக மூடப்பட்டுவிடும் எனவும், 8 மணிக்குப் பிறகு கடற்கரைப் பகுதிக்கு யாரும் செல்ல முடியாத அளவுக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மெரினாவில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர் எனவும், சென்னை முழுவதும் பத்தாயிரம் பொலிஸார் புத்தாண்டுக் கொண்டாட்டங்களைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் தமிழக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்குத் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. சென்னையைப் போன்று கடலோர மாவட்டங்களில் கடற்கரைகளுக்குச் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் அத்தியாவசியத் தேவைகளுக்காக மக்கள் வெளியில் வர எந்தத் தடையும் இல்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மதுரையில் பா.ஜ.கவின் பொங்கல் விழா பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்பாராம்



அடுத்த மாதம் 12 ஆம் திகதி தமிழகம் செல்லும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அன்றைய தினம் விருதுநகரில் நடைபெறும் விழாவில் தமிழகத்தில் புதிதாக 11 மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

அதையடுத்து மதுரையில் அதே தினத்தில் பா.ஜ.க. சார்பில் 'மோடி பொங்கல்' என்ற தலைப்பில் நடத்தப்படவுள்ள பொங்கல் விழாவிலும் அவர் பங்கேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையையொட்டி தமிழக பா.ஜ.க. சார்பில் மோடி பொங்கல் என்ற நிகழ்ச்சி ஜனவரி 12 ஆம் திகதி மதுரையில் நடைபெறவுள்ளது. இந்த விழாவானது மதுரை விமான நிலையத்துக்கு அருகேயுள்ள மண்டேலா நகரில் நடத்தப்பட வுள்ளது. இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்ளவிருக்கிறார், என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## 46 ஆவது ஜி.எஸ்.டி. குழுக் கூட்டம் டெல்லியில் இன்று ஆரம்பமானது

இந்தியத் தலைநகர் டெல்லியில் 46 ஆவது ஜி.எஸ்.டி. குழுக் கூட்டம் இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று நடைபெறுகிறது. இதில் அனைத்து மாநிலங்களினதும் நிதி அமைச்சர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் வரிச் சீர்திருத்தம் மீதான ஆய்வு அறிக்கைகளை மாநில நிதி அமைச்சர்கள் குழு, நேரடியாகச் சமர்ப்பிக்கும் என்றும், சில பொருள்கள் மீதான வரி வீதத்தை மாற்றியமைப்பது குறித்து விவாதிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

## உத்தரப் பிரதேசத்தில் திட்டமிட்டபடி தேர்தல் நடத்த கட்சிகள் விரும்புகின்றன என்கிறார் தேர்தல் ஆணையர்




உத்தரப்பிரதேசத்தில் திட்டமிட்டபடி சட்டப்பேரவை தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அனைத்துக் கட்சிகளும் விருப்பம் தெரிவித்துள்ளன என இந்திய தலைமை தேர்தல் ஆக்ணயர் சுஷில் சந்திரா தெரிவித்துள்ளார்.

உத்தப்பிரதேசசட்டப்பேரவையின் பதவிக்காலம் வரும் மார்ச் மாதம் முடிவடையும் நிலையில் அதற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ளது.

ஆனால் ஒமிக்ரோன் பரவல் எதிரொலியாக தேர்தல் ஒத்திவைக்கப்படுமா? என்ற கேள்வி எழுந்தது. இந்தநிலையில் தலைமைத் தேர்தல் ஆணையர் சுஷில் சந்திரா உத்தரப்பிரதேச கட்சிகளின் பிரதிநிதிகளுடன் லக்னோவில் ஆலோசனை நடத்தினார்.

இதன்பின் தகவல் வழங்கிய சுஷில் சந்திரா, அனைத்துக் கட்சிகளும் திட்டமிட்டபடி தேர்தல் நடத்தவேண்டும் என்று விருப்பம் தெரிவித்தன எனக் கூறினார். கொரோனாத் தொற்றை தடுக்க உரிய கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என அவர்கள் கூறினார் எனவும் அவர் தெரிவித்தார். தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் வரும் ஜனவரி 5ஆம் திகதி வெளியிடப்படும் என்றும் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் ஒப்புகைச்சீட்டு இயந்திரங்கள் வைக்கப்படும் என்றும் தேர்தல்ஆணையர்தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் ஒமிக்ரோன் பாதிப்பு தொற்றாளர்கள் 1,270 ஆக அதிகரிப்பு




இந்தியாவில் ஒமிக்ரோன் மிக வேகமாக பரவிவருவதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. நேற்றைய நிலைவரப்படி 961 பேருக்கு ஒமிக்ரோன் பாதிப்பு இருப்பதாக கூறப்பட்டிருந்த நிலையில், இன்று காலை நிலைவரப்படி அது 1,270 ஆக அதிகரித்துள்ளதாக இந்திய மத்திய சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

23 மாநிலங்களில் ஒமிக்ரோன் பரவியிருப்பதாக இந்திய மத்திய சுகாதாரத் துறையின் தகவலில் கூறப்பட்டுள்ளதோடு, மகாராஷ்டிரா, டெல்லி ஆகிய இரு மாநிலங்களிலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு ஒமிக்ரோன் பாதிப்பு எகிறத் தொடங்கியுள்ளதாகவும் அறியமுடிவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

# ஐந்து விருதுகளைப் பெற்ற ஆரையம்பதி வைத்தியசாலை




மட்டக்களப்பு மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை மாவட்ட வைத்தியசாலைகளுக்கிடையே நடாத்திய போட்டியில் ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை ஐந்து விருதுகளைப் பெற்றுள்ளது. ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய, அதிகாரி திருநாவுக்கரசு கௌரிசங்கரன் இவ்விருதுகளைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சுகாதார நிறுவனங்களுக்கிடையே நடத்தப்பட்ட சிறந்த செயற்றிறனுக்கான போட்டியில் மாவட்டத்திலேயே முதல் இடம்பெற்றுச்சாதனை படைத்த ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை சிறந்த ஆரோக்கிய வாழ்வு நிலையப்போட்டியிலும் முதலிடம் பெற்றுள்ளது.

ஆரம்ப சுகாதார பராமரிப்பு திட்டம் 2019/2020 ஆம் ஆண்டுக்கான போட்டியில் இரண்டாமிடத்தையும் ஆய்வுகூட சேவைகள் போட்டியிலும் சிறந்த மருந்துக்களஞ்சியசாலை மற்றும் மருந்து வழங்கல் சேவையிலும் சிறப்பு பாராட்டு விருதுகளையும் சுவீகரித்துக்கொண்டது. அதற்கான விருதுகள் இவ்வாண்டுக்கான செயற்றிறன் விருது வழங்கும் விழாவின் போது வழங்கிவைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு இவ்விருதுகளை வழங்கி வைத்துள்ளார்.

## கதிரவெளி விக்னேஸ்வரா தேசிய பாடசாலைக்கு உட்கட்டமைப்பு வசதிகளுடன் தொழில்நுட்ப பீடம்



மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் புதிய தொழில்நுட்ப கற்கைகள், தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் விஸ்தரிக்கபடவேண்டும் இதனை நோக்காகக் கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட கதிரவெளி விக்னேஸ்வரா தேசிய பாடசாலைக்கு 5.33 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடியமூன்றுமாடிஉயர்தொழில்நுட்ப பீடம் அமைக்கப்பட உள்ளது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கல்குடா வலயத்திற்குட்பட்ட இறால் ஓடை வள்ளுவர் வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்தார்.

இன்றைய அரசாங்கத்தினால் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஊடாக பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன நவீனமயப்படுத்தபடுகின்றன ஆனால் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் கல்வி முறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அனைத்து மாணவர்களின் முன்னேற்றத்தை நோக்கியதான ஒரு மாற்றம் நடைமுறைப்படுத்துவது அவசியமான ஒன்றாக இருக்கின்றது இந்த மாற்றம் வகுப்பில் முதலாம் தரத்தைப் பெறும் மாணவருக்கும் வகுப்பில் இறுதியாக வரும் மாணவருக்கு உள்ள திறமைகளை இனங்கண்டு அந்தத் துறையில் மாணவர்களை முன்னேற்றம் ஏற்படுத்தவே மாற்றங்கள் வேண்டும் ஒவ்வொரு மாணவனுக்கும் இன்றைய நவீன தொழில்நுட்ப வாழ்க்கையில் முன்னேறுவதற்கான தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். வெறும் பரீட்சைகள் மாத்திரம் மாணவனின் வாழ்க்கையை தீர்மானிக்கக்கூடாது. ஒவ்வொரு மாணவனுக்கும் அவரவர் துறை சார்ந்து வழிகாட்டலுடன் நம்பிக்கை ஊற்றப்பட வேண்டும். இது ஆசிரியர் ஒவ்வொருவரினதும் கடமையாக இருக்கின்றது. ஒவ்வொரு மாணவனும், மாணவியும் தனது வாழ்க்கையில் 24,000 மணித்துளிகள், 13 வருடத்தில் பள்ளியில் ஆசிரியர்களுடன் கல்வியறிவை பெற பயன்படுத்துகிறார்கள் எனவும் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.



## திருகோணமலையில் எரிவாயு அடுப்பு வெடித்தது

திருகோணமலை லிங்கநகர் முருகன் கோவில் 24ஆம் ஒழுங்கையில் நேற்று பிற்பகல் சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இல்லத்தரசியும் அவரது கணவரும் சமையல் அறையில் சமையல் செய்து கொண்டிருந்த போது இவ் வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் கணவர் அருகில் இருந்தமையினால் தீ கட்டுப்படுத்தப் பட்டதாகவும் பாதிக்கப்பட்ட இல்லத்தரசி தெரிவித்தார்.

சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம் தொடர்பில் திருகோணமலை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### மட்டக்களப்பில்

## விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வு

சர்வதேச விவசாயிகள் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மண்முனை மேற்கு விவசாயிகள் அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் விவசாயப் புரட்சியாளர்கள் எனும் நாமம் சூட்டி மூத்த முன்னோடி விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வு வவுணதீவு உழவர் சந்தியில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் ஆர். குணாநிதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரன், மண்முனைமேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், விதை நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலைய பிரதி விவசாய பணிப்பாளர் ஆர்.சிவனேசன், உறுகாம நீர்ப்பாசன திட்ட பொறியியலாளர் ஏ.விஸ்ணுரூபன், வவுணதீவு பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஜி.எஸ். பிரியங்கர மற்றும் பட்டிருப்பு, கல்குடா மட்டக்களப்பு பிரதேச தமிழ் விவசாயிகள் அமைப்பினர், கைத்தொழில் விவசாய சம்மேளன பிரதிநிதிகள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடைபெற்ற இந்நிகழ்வில் விவசாயிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமையுடன், இதன்போது 12 மூத்த முன்னோடி விவசாயிகளுக்கு பொன்னாடை போர்த்தி மகுடம் அணிவித்து நினைவுப் பரிசில்களும் விருந்தினர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மாவட்டத்தில் இடம்பெற்ற சர்வதேச விவசாயிகள் தினக் கொண்டாட்டங்களில் வரலாற்றில் முதல் தடவையாக மூத்த முன்னோடி விவசாயிகள் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இராட்சத மலைப்பாம்பு திருமலையில் பிடிப்பு



திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமார் 14 அடி நீளமான இராட்சத மலைப்பாம்பு ஒன்று நேற்று அதிகாலை பிடிக்கப்பட்டுள்ளதாக கந்தளாய் பிராந்திய வன ஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் நீதிவான் நீதிமன்ற பிரதேசத்தினை அண்மித்த பகுதியில் இந்த மலைப் பாம்பு பிடிக்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மலைப்பாம்பு கடந்த இரண்டு நாள்களாக வந்து சென்றதை அப்பகுதியில் வசிப்போர் கண்டுள்ளோம் என தெரிவிக்கின்றனர்.

மலைப்பாம்பினை பிரதேச பொது மக்கள், இளைஞர்கள் ஒன்றிணைந்து வனஜீவராசி அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர் என தெரிவிக்கப்படுகிறது.



# முதல் டெஸ்ட்டில் இந்தியாவுக்கு வெற்றி

தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இந்திய அணி 113 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில், இந்திய அணி முன்னிலை பெற்றுள்ளது.

செஞ்சூரியனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, முதல் இன்னிங்ஸிற்காக 327 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. கே.எல். ராகுல் 123ஓட்டங்களையும்மயங்அகர்வால் 60 ஓட்டங்களையும் எடுத்தனர். தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சில், லுங்கி இங்கிடி 6 விக்கெட்டுக்களையும் ரபாடா 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, 197 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. அணித்தலைவர் பவுமா 52 ஓட்டங்களையும் குயின்ரன் டி கொக் 34 ஓட்டங்களையும் பெற்றனர். இந்திய அணியின் மொஹமட் ஷமி 5 விக்கெட்டுக்களையும் பும்ரா மற்றும் தாகூர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 130 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி, 174 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, தென்னாபிரிக்க அணிக்கு 305 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்திய அணியின் ரிஷப் பண்ட் 34 ஓட்டங்களையும் கே.எல். ராகுல் 23 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

தென்னாபிரிக்க அணியின் ரபாடா, மார்கோ ஜென்ஸன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும் லுங்கி இங்கிடி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 305 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, 191 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதனால், இந்திய அணி 113 ஓட்டங்களால் இந்தப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது. தென்னாபிரிக்காவின் டீன் எல்கர் 77 ஓட்டங்களையும் பவுமா ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில், பும்ரா, மொஹமட் ஷமி ஆகியோர் தலா 3 விக்கெட்க்டுகளையும் மொஹமட் சிராஜ் மற்றும் அஸ்வின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணியின் கே.எல். ராகுல் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி, அடுத்த ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி ஜோகன்னஸ்பேர்க்கில் நடைபெறவுள்ளது.

# டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து குயின்ரன் டி கொக் ஓய்வு



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வீரரான குயின்ரன் டி கொக், டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறேன் என திடீரென அறிவித்துள்ளார்.

தற்போது இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடி வரும் குயின்ரன் டி கொக், நேற்று முடிவடைந்த முதலாவது டெஸ்ட் போட்டியின் பின்னர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

தனது ஓய்வு குறித்து குயின்ரன் டி கொக் கூறுகையில், 'இது நான் மிக எளிதாக எடுத்த முடிவு அல்ல. மனைவி சாஷாவும் நானும் எங்கள் முதல் குழந்தையை இந்த உலகத்திற்கு வர வழைத்து, எங்கள் குடும்பத்தை வளர்க்கப் போகிறோம் என்ற நிலையில் இந்த முடிவை எடுத்துள்ளேன்.

என் வாழ்க்கையில் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதைப்பற்றி சிந்திக்க நான் நிறைய நேரம் எடுத்துக்கொண்டேன். குடும்பம்தான் எனக்கு எல்லாமே. எங்கள் வாழ்க்கையின் இந்த புதிய மற்றும் அற்புதமான அத்தியாயத்தின்போது அவர்களுடன் இருக்க நேரத்தையும் இடத்தையும் தக்கவைக்க விரும்புகிறேன்.

நான் டெஸ்ட் கிரிக்கெட்டை விரும்புகிறேன். எனது நாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்துவதையும், அதனால் வரும் அனைத்தையும் நான் விரும்புகிறேன். ஏற்றத் தாழ்வுகளையும் கொண்டாட்டங்களையும் ஏமாற்றங்களையும் கூட அனுபவித்து மகிழ்ந்தேன். ஆனால், இப்போது நான் இன்னும் அதிகமாக விரும்பும் ஒன்றைக் கண்டேன்.

வாழ்க்கையில், நீங்கள் நேரத்தைத் தவிர எல்லாவற்றையும் வாங்கலாம். இப்போது எனக்கு மிகவும் வேண்டியவர்களுக்காக சரியான நடவடிக்கையை எடுக்கவேண்டிய நேரம் இது' என தெரிவித்திருக்கிறார்.

29 வயதான குயிண்டன் டி கொக், 2012 ஆம் ஆண்டு நியூசிலாந்து அணிக்கெதிரான ரி-20 போட்டியோடு தனது சர்வதேச கிரிக்கெட் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார். 2013 ஆம் ஆண்டு நியூசிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் போட்டியிலும், 2014 ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியிலும் அவர் அறிமுகமானார்.

இதுவரை 54 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள டி கொக், 6 சதங்கள் 22 அரைச்சதங்கள் அடங்கலாக 3,300 ஓட்டங்களைப்பெற்றுள்ளார். இன்னிங்ஸ் ஒன்றில் அவரது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 141 ஆகும்.

தென்னாபிரிக்க அணியின் மிகச் சிறப்பான விக்கெட் காப்பாளர்களில் ஒருவரான குயின்ரன் டி கொக், இந்த வருடத்தை தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் தற்காலிகத் தலைவராக ஆரம்பித்து, அதே வருடத்தில் தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்வையும் நிறைவுசெய்துகொண்டிருக்கிறார்.



# பிக் பாஷ் லீக் கிரிக்கெட் தொடர் கொரோனாத் தொற்றால் சிக்கல்

ஆஸ்திரேலியாவில் பிக் பாஷ் ரி-20 லீக் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் 8 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன. கடந்த ஐந்தாம் திகதி இத்தொடர் தொடங்கிய நிலையில், உருமாற்றம் அடைந்த ஒமிக்ரோன் வைரஸ் அச்சுறுத்தல் இருந்தபோதிலும், பாதுகாப்பு வளையத்திற்குள் இருந்த வண்ணம் வீரர்கள் விளையாடி வந்தனர். இந்த நிலையில், பாதுகாப்பு வளையத்தையும் மீறி சிட்னி தண்டர் அணியைச் சேர்ந்த 4 வீரர்களுக்கும், மெல்பேர்ன் ஸ்டார்ஸ அணியைச் சேர்ந்த 7 வீரர்களுக்கும் கொரோனாப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் உதவி உத்தியோகத்தர்கள் 8 பேருக்கும்கூட கொரோனாப் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் நேற்று நடைபெறவிருந்த ஆட்டம் ஒத்திவைக்கப்பட்டது. இன்று நடைபெறும் போட்டிக்கு மிகுந்த கட்டுப்பாடுகளோடு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

# அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் ரொஸ் டெய்லர் ஓய்வு பெறவுள்ளாராம்

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் அனுபவமிக்க துடுப்பாட்ட வீரரான ரொஸ் டெய்லர், அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுபெறப் போகிறேன் என அறிவித்துள்ளார். எதிர்வரும் பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருடன் அவர் ஓய்வு பெறவுள்ளார். 37 வயதான ரோஸ் டெய்லரின் கடைசி டெஸ்ட் கிறிஸ்ட்சேர்ச்சில்நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை 110 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர், டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அதிக மொத்த ஓட்டங்களைப் பெற்ற நியூசிலாந்து வீரராகத் திகழ்கிறார்.

தனது ஓய்வு குறித்து ரோஸ் டெய்லர் கூறுகையில், 'இது ஒரு அற்புதமான பயணம். எனது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தியதை நம்பமுடியாத அதிர்ஷ்டமாக உணர்கிறேன். சில சிறந்த வீரர்களுடன் விளையாடுவதும், அவர்களுக்கு எதிராக விளையாடுவதும், பல நினைவுகளையும் நட்பையும் உருவாக்கியதும் பாக்கியமாகும்.



ஆனால், எல்லா நல்ல விடயங்களும் முடிவுக்கு வர வேண்டும். நேரம் எனக்கு சரியானதாக இருக்கிறது. எனது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் இந்த நிலைக்கு வர உதவிய அனைவருக்கும் நன்றி சொல்ல விரும்புகிறேன்' என தெரிவித்துள்ளார். ரோஸ் டெய்லர் இதுவரை 110 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 3 இரட்டைச் சதங்கள், 19 சதங்கள் 35 அரைச்சதங்கள் அடங்கலாக 7,585 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். 233 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 21 சதங்கள், 51 அரைச் சதங்கள் அடங்கலாக 8,576 ஓட்டங்களையும், 102 ரி-20 போட்டிகளில் விளையாடி 7 அரைச்சதங்கள் அடங்கலாக 1,909 ஓட்டங்களையும் சேர்த்திருக்கிறார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையை தரமுயர்த்த நடவடிக்கைகளை எடுப்பேன்!

## நேரில் விஜயம் செய்த சிறிதரன் எம்.பி. உத்தரவாதம்





(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,டிசெ.31

பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையை தரம் உயர்த்தினால் அந்தப் பகுதி மக்கள் தூர இடங்களுக்கு வைத்திய சேவையை பெற செல்லாமல் இங்கேயே சிகிச்சையை பெறலாமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலைக்கு விஜயம் செய்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் மாதாந்தம் 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட தொற்றா நோயாளர்கள் மற்றும் ஏனைய நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அடிப்படை வசதிகள் இருந்தும் ஒரு வைத்தியரும் மற்றொரு பல் வைத்தியரும் அவருடன் இணைந்த 4 ஊழியர்களுடனேயே வைத்தியசாலை இயங்கிவருகின்றது.

வெளிநோயாளர் பிரிவு இயங்கி வந்தாலும் கூட ஆளணி பற்றாக்குறை காரணமாக விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற முடியாத நிலைமை காணப்படுகின்றது. ஐந்து ஏக்கர் காணி பரப்பிலே பொதுமக்களின் ஒத்துழைப்புடன் இந்த வைத்தியசாலை இயங்கி வருகின்றது.

வைத்தியசாலை பாவனைக்காக பொதுமக்களால் ஒரு ஓட்டோ வழங்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறான அடிப்படை வசதிகள் இருந்தும் கூட ஆளணி பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலை முழுமையான சேவையைப் பெற முடியாத நிலைமை காணப்படுகின்றது.

தரம் இரண்டிலிருந்து இந்த வைத்தியசாலை தரம் ஒன்றுக்கு மாற்றப்பட வேண்டும் என பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இவர்கள் வைத்திய சேவைகளை பெறுவதற்காக அதிக தூரம் பயணித்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலையில், அருகிலேயே இந்த வைத்தியசாலையை தரம் மாற்றினால் ஆளணியும் உயர்வுடன் இந்த பகுதி மக்கள் இங்கேயே சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும். உரிய தரப்புகளுடன் பேசி இதற்கான நடவடிக்கைகளை நாம் எடுப்போம். – என்றார். அத்துடன் மாதகல் சென் தோமஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கும் அவர் விஜயத்தை மேற்கொண்டு பார்வையிட்டார். நாடாளுமன்ற உறுப்பினரின் விஜயத்தின் போது கட்சி உறுப்பினர்களும் வருகை தந்திருந்தனர்.

# வெற்று சிலிண்டர்களுடன் வீதிக்கு ஜனவரி முதல் மக்கள் இறங்குவர்!

## சிவில் சமூக அமைப்புகள் பேரணி நடத்த முடிவு

நாளை எரிவாயு சிலிண்டர்களுடன் மாபெரும் பேரணி ஒன்றை நடத்துவதற்கு பல சிவில் சமூக அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

தற்போதைய எரிவாயு தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த எதிர்ப்பு பேரணி நடத்தப்படவுள்ளதாக சிவில் சமூக அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

போராட்டம் நடத்தப்படும் வீதிகள் தொடர்பான தகவல்கள் இன்று (வெள்ளிக்கிழமை) அறிவிக்கப்படும் என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பிரதேசங்களில் இருந்து ஆரம்பிக்கப்படும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அனைத்தும் பிரதான வீதிகளின் ஒரு இடத்தில் இணைந்து பயணிக்க யோசனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# வர்த்தகரை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி வாகனம் கொள்ளை!

கம்பஹா – உணகஹா தெனிய பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி, அவரது கப் ரக வாகனத்தை மூவர் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று (வியாழக்கிழமை) காலை மூவரடங்கிய குறித்த கொள்ளைக்கார கும்பல் உணகஹாதெனிய பிரதேசத்துக்குச் சென்று துப்பாக்கியைக் காண்பித்து வர்த்தகரை கொன்றுவிடுவோம் என அச்சுறுத்தி அவரது வாகனத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறிருப்பினும் கொள்ளையர்கள் வாகனத்தில் வருகை தந்தார்களா அல்லது நடந்து வந்துள்ளார்களா என்பது கண்டுபிடிக்கப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் தகவல்கள் கிடைத்தவுடன் நிட்டம்புவ பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கம்பஹா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்திக டி சில்வா மற்றும் அத்தனகல்ல மேலதிக பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் தயானந்த ஆகியோரின் ஆலோசனை மற்றும் கண்காணிப்பின் கீழ் நிட்டம்புவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் கே.டீ.பி.அபேரத்ன தலைமையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# நாட்டில் 13 ஆயிரம் தாதிமார்கள் பதவியுயர்வை இழக்கும் அபாயம்

## சமன் இரத்தினபிரிய தெரிவிப்பு

அகில இலங்கை ரீதியாக 13 ஆயிரம் தாதிய உத்தியோகத்தர்கள் தமது பதவி உயர்வை இழக்கின்ற நிலை தற்போது ஏற்பட்டுள்ளமையால் எமது சங்கப்பிரதிநிதிகளுடனான அகில இலங்கை ரீதியாக போராட்டம் இடம்பெறுகின்றது என அரச தாதியோர் உத்தியோகச் சங்கத் தலைவர் சமன் இரத்தினபிரிய தெரிவித்துள்ளார்.

வடமாகாண சுகாதார தொழில் வல்லுநர்கள் சம்மேளனம் மற்றும் அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம் மற்றும் இலங்கை தாதியோர் சங்கத்தின் கம்பனி யூனியன் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த ஏற்பாட்டில், சுகாதார அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்ட ரணக்கே என்ற அரச திட்டத்தை அமுலாக்கவேண்டும் என வலியுறுத்தி 19 அம்சக்கோரிக்கையை உள்ளடக்கிய கவனவீர்ப்பு போராட்ட பேரணி நேற்று (வியாழக்கிழமை) யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நடைபெற்றது. இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்– எமது கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று சுகாதார அமைச்சருக்கு நாம் தெளிவாகக் கூறுகின்றோம். இந்த போராட்டங்கள் நடத்தப்பட்டாலும் கூட எந்தவொரு நடவடிக்கையையும், அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, சுகாதார அமைச்சரின் செயலாளர் கூட எமது போராட்டத்தின் கோரிக்கைக்கு செவி சாய்க்காமல் உள்ளனர்.

சுகாதார அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்ட ரணக்கே சம்பள ஆணைக்குழுவில் 2010ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், மேலதிக நேரக்கொடுப்பனவை அதிகரிக்கவேண்டும், விசேட கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும், பதவி நிலை சுற்று நிருபம் பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சால் வழங்கப்பட்ட போதிலும் அதன் காரணமாக சுகாதார அமைச்சு அதற்காக சுற்றுநிருபத்தை வெளியிடவில்லை, சுகாதார அமைச்சர் இராணுவத்துக்கு அல்லர். அவர் பொதுமக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யவேண்டும்.

இதனால் எமது கோரிக்கைகளுக்கான நிவாரணங்களை பெற்றுத்தரும் வரை எமது போராட்டம் அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# இனிமேல் கடைகளில் பால் தேநீர் கிடையாது!

*பால் மாவின் விலை அதிகரிப்பு காரணமாக நேற்று (வியாழக்கிழமை) முதல் பால் தேநீர் விற்பனையை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். ஒரு கோப்பை பால் தேநீரின் விலை 80 ரூபாவுக்கும் அதிகமாக அதிகரிக்கப்படவுள்ளதால், பால் தேநீரை விற்பனை செய்வதிலிருந்து விலக தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.*

*பால் மாவின் விலை அதிகரித்துள்ள இவ்வேளையில் மீண்டும் ஒரு கப் பால் தேநீரின் விலையை அதிகரித்தால் அதனை நுகர்வோர்களால் தாங்கிக்கொள்ள முடியாது என்பதற்காகவே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.12.2021இல் வெளியிடப்பெற்றது.